# தொகை வகைகள்

## தொகையென்பது யாது?

இரு சொற்கள் சேர்ந்து வருவது தமிழிலக்கணத்தில் தொகையெனப்படும். (உ-ம்) செந்தாமரை (செம்மை+தாமரை). தொகைகள்: வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்று பலவகைப்படும். அவை பின்வருமாறு:-

### I. வேற்றுமைத் தொகை:

இரு சொற்களுக்கிடையே "ஐ", "ஆல்", "கு", "இன்", "அது", "கண்" முதலான உருபுகள் மறைந்திருக்குமானால் அது வேற்றுமைத் தொகையாம்: -

எடுத்துக்காட்டு:-

www.tamilgk.com

1. இரண்டாம் வேற்றுமை:
   (எ-கா)தமிழ் கற்றான் - "ஐ" மறைந்துள்ளது.
   இரண்டாம் வேற்றுமையுருபும் பயனும் உடன் தொக்கத்தொகையும்:-
   (எ-கா): தயிர்க்குடம் - "ஐ" உருபும், உடைய எனும் சொல்லும் மறைந்துள்ளன.

2. மூன்றாம் வேற்றுமை:
   (எ-கா)தலை வணங்கினான் - "ஆல்" மறைந்துள்ளது
   மூன்றாம் வேற்றுமையுருபும் பயனும் உடன் தொக்கத்தொகையும்:-
   (எ-கா): பொற்குடம் - "ஆல்" உருபும் செய்த எனும் பயனும் மறைந்துள்ளது.
3. நான்காம் வேற்றுமை:
   (எ-கா)நோய் மருந்து - "கு" மறைந்துள்ளது.

4. ஐந்தாம் வேற்றுமை:
   (எ-கா)மலையருவி - "இல்" (அ) "இன்" மறைந்துள்ளது
   ஐந்தாம் வேற்றுமையுருபும் பயனும் உடன் தொக்கத்தொகையும்:-
   (எ-கா)புண்ணீர் - "இல்" எனும் உருபும் இருந்து என்னும் பயனும் மறைந்துள்ளன
5. ஆறாம் வேற்றுமை:
   (எ-கா)தமிழர் பண்பு - "அது" மறைந்துள்ளது
   (எ-கா)அவன் வண்டி - "உடைய" மறைந்துள்ளது
6. ஏழாம் வேற்றுமை:
   (எ-கா)மணி ஒலி - "கண்" மறைந்துள்ளது
   ஏழாம் வேற்றுமையுருபும் பயனும் உடன் தொக்கத்தொகையும்:-
   (எ-கா)வயிற்றுத்தீ - "கண்" உருபும், தோன்றிய என்னும் பயனும் மறைந்துள்ளன.

www.tamilgk.com

II. வினைத்தொகை:-

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களும் இருசொற்களுக்கு இடையில் மறைந்திருப்பின் இவை வினைதொகை எனப்படும். எளியவழி: (1) இத்தொகையில் இரு சொற்களே இருக்கும் (2) முதலில் இருக்கும் சொல் வினைச் சொல்லாக இருக்கும் (3) இரண்டாவது சொல் பெயர்ச்சொல்லாகவும் இருக்கும்:-

- (எ-கா)
  "சுடுசோறு" -
  சுடுகின்ற சோறு (நிகழ்காலம்)

சுட்ட சோறு (இறந்தகாலம்)
சுடும் சோறு (எதிர்காலம்)

## பண்புத்தொகையும் இருபெயரொட்டுப் பண்புத்தொகையும்:-

பண்புப் பெயர்ச்சொற்களுடன் வேறு பெயர்ச்சொல் சேர்ந்து வருமாயின் அவை பண்புத்தொகையெனப்படும். அதுபோல இரண்டு சொற்கள் கொண்ட ஒரு பண்புத்தொகையில் முதலில் வரும் சொல் சிறப்புப் பெயர்ச்சொல்லாகவும் இரண்டாவது வரும் பெயர்ச்சொல் பொதுப்பெயர்ச்சொல்லாகவும் இருப்பின் அது இருபெயரொட்டுப் பண்புத்தொகையெனப்படும்:-

பண்பாவன: குணம்(நன்மை, தீமை), உருவம்(வட்டம், சதுரம்), நிறம்(நீலம், பசுமை), எண்ணம்(ஒன்று, பத்து), சுவை(துவர், காரம்).

- (எ-கா)
  பண்புத்தொகை:
  "பண்புத்தொகை" "சேவடி", "செங்கண்", "நெடுங்கடல்", "மூதூர்", "தண்தயிர்", "பைந்தொடி", "வெண்சிலை", "நாற்படை"
- (எ-கா)
  இருபெயரொட்டுப் பண்புத்தொகை:
  "கைத்தலம்" "பலாமரம்", "மடித்தலம்", "இந்தியநாடு", "விற்படை", "வெண்தயிர்", "ஒண்டொடி", "கருஞ்சிலை", "நாற்படை"

www.tamilgk.com

## உவமைத் தொகை:-

உவமைத் தொகை கண்டுபிடிக்க (1) இரு சொற்களுள்ள தொகைச் சொல்லாக இருக்கவேண்டும். அதில் முதற்சொல் ஒரு உவமைச்சொல்லாக இருத்தல் வேண்டும். இதுவே உவமைத்தொகை

- (எ-கா)
  பானைவாய்:
  இதில் பானை என்பது உவமை (பானையின் வாயை போன்ற)
- (எ-கா)
  மேலும் சில எடுத்துக்காட்டுகள்:
  "மதிமுகம்" "மலரடி", "துடியிடை", "கமலக்கண்",
  "கனிவாய்", "தேன்மொழி", "செங்கண்", "மான்விழி",
  "வாள்மீசை"-

www.tamilgk.com

## உம்மைத் தொகை:-

உம்மைத் தொகை கண்டுபிடிக்க (1) சேர்ந்த இரு சொற்களும் தொடர்புள்ள சொல்லாக இருக்கவேண்டும்.(எ-கா) மாடுகன்று. (2) இரு சொற்களுக்கிடையில் "உம்" சேர்ப்பின், பொருள் சரியாக இருத்தல் வேண்டும். இவ்வாறு இருப்பின் அது உம்மைத்தொகை என்று கொள்க:-

- (எ-கா)
  சேர சோழ பாண்டியர்:
  இதில் சேரரும், சோழரும் , பாண்டியரும் என்று பொருள் தரும்

- (எ-கா)
  மேலும் சில எடுத்துக்காட்டுகள்:
  "வேண்டுதல் வேண்டாமை" "அருளாண்மை",
  "தாய்தந்தை", "நரைதிரை", "காயிலைக்கிழங்கு",
  "கபிலபரணர்"

அன்மொழித் தொகை:-

இதுவரையிற் கூறிய தொகைகளில் அல்லாத சொற்கள் மறைந்துவருமாயின் அது அன்மொழித்தொகையாகும். மேலும் இவ்வன்மொழித்தொகை முன் சொன்ன ஐந்து தொகைகளில் ஒன்றாக இருக்கும். (எ-கா) "ஆயிழை வந்தாள்" - இதில் ஆயிழையென்பது காலங்காட்டாத வினைத்தொகை (ஆராய்ந்த இழை, ஆராய்கின்ற இழை, ஆராயும் இழை). ஆயின் இவ்விடத்தில் அந்த இழையணிந்த பெண்ணென்று பொருளாததால், இது வினைத்தொகைப் புறத்தெ பிறந்த அன்மொழித்தொகை எனப்படும். இவ்வாறே மற்ற தொகைகளின் புறத்தே இந்த அன்மொழித்தொகை அமைந்திருக்கும்:-

www.tamilnk.com

- மேலும் சில எடுத்துக்காட்டுகள்:
  "கோற்றொடியைக் கொன்று என் செய",
  "ஏந்திழை ஈமக் கடனிறுவிப் போது"
  "வீமன் திருமகளாம் மெல்லியலை",
  "ஆயமும் காவலும் ஆயிழை தனக்கு",
  "தந்துயர் காணா தகைசால் பூங்கொடி",
  "விளங்கிழை தமியன் ஆனாள்",
  "அஞ்சொல் இளவஞ்சி அடியெந்தோள் ஏறு"